අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/03/56/04/01 | ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. | දිනය / திகதி / Date 2023. 12 .21

சுற்றறிக்கை இலக்கம் : 38 /2023

மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலை அதிபர்களுக்கு,

**பாடசாலை ஆராய்ச்சி மாணவர் கழகங்களை ஸ்தாபித்தல்**

**1.0 அறிமுகம்**

புதிய அறிவை ஆராய்வதற்குப் பயன்படுத்தப்படும் அறிவார்ந்த மற்றும் தர்க்கரீதியான செயல்முறையாக ஆராய்ச்சியை அழைக்கலாம். இது பெரும்பாலும் மருத்துவம், பொறியியல், சமூக அறிவியல் மற்றும் கல்வி போன்ற துறைகளில் நடைமுறையில் உள்ளது. இதில் குறிப்பிட்ட சிக்கல்களுக்கான பதில்களைக் கண்டறிய/சிக்கல்களைத் தீர்க்க/ புதிய அறிவைக் கண்டறிவதற்கான தகவல்கள் மற்றும் தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் விளக்குதல் ஆகியவை உள்ளடங்களாக, முறையாக மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட விசாரணைச் செயற்பாடான ஆய்வின் ஊடாக மீண்டும் மீண்டும் ஆய்வு செய்தல் இடம்பெறும். புதிய அறிவை உருவாக்குதல், தவறான கருத்துக்களைத் திருத்துதல் மற்றும் இருக்கும் அறிவை முறையாகத் தயார்படுத்துதலுடன், இருக்கும் அறிவு மற்றும் தகவல்களைப் பயன்படுத்தி சரியான முடிவுகளை எடுக்கும் திறன் ஆகியவை உலகளாவிய கிராமத்திற்குள் நுழைவதில் இன்றியமையாத காரணிகளாகிவிட்டன. அதற்காக, ஒரு நாட்டின் வருங்காலக் குடிமக்களாக இருக்கும் பாடசாலை மாணவர்களை, புதிய அறிவைக்கொண்டு வலுப்படுத்தி, அவர்களை ஆய்வு ரீதியிலும், தர்க்கரீதியாகவும், எதிர்கால வேலை உலகிற்குத் தயார்படுத்தும் வகையில், ஆராய்ச்சிக்கு வழிகாட்டுவதுடன், புதிய ஆராய்ச்சியின் ஊடாக கிடைக்கப்பெறும் அறிவிற்கு உலகளாவிய மதிப்பை உருவாக்குவது அவசியமாகும்.

இந்த நாட்டின் பாடசாலை அமைப்பில் சான்று அடிப்படையிலான முடிவெடுக்கும் கலாசாரத்தை உருவாக்குவதன் ஊடாக மாணவர்களை அறிவு நிரம்பிய எதிர்காலத்திற்கு இட்டுச் செல்லும் நோக்கில் பாடசாலை ஆராய்ச்சி மாணவர் கழகங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. அதற்கான நிபந்தனைகள், அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் இந்த சுற்றறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன. 01.01.2024 முதல் நடைமுறைக்கு வரும் இச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின்படி, பாடசாலை ஆராய்ச்சி மாணவர் கழகங்களை

நிறுவி, அவர்களை ஆண்டுதோறும் பலப்படுத்துமாறு தங்கள் மாகாணத்தின் / கல்வி வலயத்தின் / கல்விக் கோட்டத்தின் / பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அறிவுறுத்தப்படல் வேண்டும்.

**2.0 பாடசாலை ஆராய்ச்சி மாணவர் கழகம் - அறிமுகம்**

பாடசாலை ஆராய்ச்சி மாணவர் கழகம் என்பது பாடசாலை மாணவர்களை ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஊக்குவித்தல் மற்றும் ஆராய்ச்சி நடத்துவதற்கு அனுப்புவதற்காகவும்

பாடசாலைகளில் நிறுவப்பட்ட இணைபாடவிதான செயல்பாடுகளைக் கொண்ட ஒரு மாணவர் கழகமாகும்.

## 3.0 பாடசாலை ஆராய்ச்சி மாணவர் கழகங்களை ஆரம்பிப்பதற்கான தேவைப்பாடு

பாடசாலைகளில் ஆராய்ச்சி கலாச்சாரத்தை உருவாக்குதல் மற்றும் பாடசாலை மாணவர்களின் கல்வி, விமர்சன, ஆய்வு மற்றும் ஆக்கப்பூர்வமான ஆராய்ச்சி திட்டங்களில் ஈடுபட ஊக்குவித்தல், அதற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் முறையான வழிகாட்டுதல்களை பாடசாலை ஆராய்ச்சி மாணவர் கழகங்களை நிறுவுவதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. பாடசாலை ஆராய்ச்சி மாணவர் கழகங்களை அமைப்பதற்குப் பின்வரும் வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுதல் வேண்டும்.

## 4.0 பாடசாலை ஆராய்ச்சி மாணவர் கழகங்களை நிறுவுவதன் நோக்கங்கள்

4.1 ஆய்வு, தகவல் சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் முன்வைப்பு மூலம் மாணவர்களின் விமர்சன மனப்பாங்கை மேம்படுத்தல்.

4.2 பல்வேறு விடயங்களை ஆராய மாணவர்களை ஊக்குவிப்பதன் மூலம் பாடசாலைகளில் ஆராய்ச்சிக் கலாச்சாரத்தை நிறுவுதல்.

4.3 விமர்சன சிந்தனை மற்றும் சிக்கல் தீர்க்கும் திறன்களை வளர்ப்பதன் மூலம் பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வலுவூட்டுதல்

4.4 ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் சுய மதிப்பீடு, இலக்குகளை அடைவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல், சரியான நேர முகாமைத்துவம் போன்றவைகளின் மூலம் ஆளுமையை வளர்த்தல்.

4.5 ஆராய்ச்சி திறன்களை வளர்ப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் மாணவர்கள் பெறும் அனுபவம் மற்றும் நிபுணத்துவம் மூலம் உயர்கல்வி வாய்ப்புகளுக்கான வழிகளை இலகுவாக்கிக் கொள்ளல்.

4.6 பாடசாலை சமூகத்தின் தேவைகள் மற்றும் பிரச்சனைகளை அடையாளம் கண்டு, ஆராய்ச்சிபூர்வமான, முறையான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஆய்வுக்காக மாணவர்களை ஊக்குவித்தல்

4.7 அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தொழில்முறை நிலை ஆராய்ச்சியாளர்களுடன் தனிப்பட்ட உறவுகளை வளர்ப்பதற்கான வாய்ப்புகளை மாணவர்களுக்கு வழங்குதல்

## 5.0 உறுப்புரிமை

ஆராய்ச்சியில் ஆர்வமுள்ள தரம் 6 முதல் தரம் 13 வரை படிக்கும் எந்தவொரு மாணவரும் இங்கு உறுப்பரிமையைப் பெற்றுக்கொள்ள முடியும். பாடசாலை ஆராய்ச்சி மாணவர் கழகத்திற்கு உறுப்பினர்களை சேர்க்கும் முறையை பாடசாலை மட்டத்தில் தீர்மானிக்க முடியும்.

## 6.0 செயற்குழுச் சபை

6.1 செயற்குழுச்சபை, நிறைவேற்றுக் குழுவினர் மற்றம் செயற்குழுச் சபையினர்களைக் கொண்டதாகக் காணப்படும்.

6.2 க.பொ.த. (உயர்தர) வகுப்புகளில் கல்வி பயிலும் உறுப்பினர்களில் இருந்து செயற்குழுவின் நிறைவேற்றுச் சபையினர் தெரிவுசெய்யப்படவேண்டும். க.பொ.த. (உயர் தர) வகுப்புகளில் போதிய எண்ணிக்கையில் மாணவர்கள் இல்லாத / க.பொ.த. (உயர்தரம்) வகுப்புகள் இல்லாத (வகை II) பாடசாலைகளில் க.பொ.த. (சாதாரண தர) மாணவர்களைக் கொண்டு செயற்குழுவின் நிறைவேற்றுச் சபையினர் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

6.2 இக்குழுவின் பதவிக்காலம் ஒரு வருடத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ளது. எனினும் ஒரு மாணவர் நிர்வாகக் குழுவில் எந்தவொரு பதவியையும் தொடர்ந்து வகிக்கக்கூடிய அதிகபட்ச காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும்.

## 7.0 அதிகாரிகள் குழுவின் அமைப்பு

7.1 கீழே 7.2 இல் (i) முதல் (iii) வரையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள் பாடசாலையின் அதிபர் உட்பட ஆசிரியர்களிடமிருந்தும், (iv) முதல் (ix) வரையிலான பதவிகள் பாடசாலை மாணவர்களிடமிருந்தும் நியமிக்கப்பட வேண்டும். (ஆராய்ச்சியில் ஆர்வமும் திறனும் உள்ள மாணவர்களை அந்தந்த ஆசிரியர்களின் ஒப்புதலுடன் நியமிக்கப்பட வேண்டும்).

7.2 பொருளாளர் பொறுப்பை மேற்பார்வையிட வணிக ஆசிரியர் அல்லது பொருத்தமான வேறு ஆசிரியர் ஒருவரை இணைத்துக்கொள்ள வேண்டும்.

i. பிரதான காப்பாளர் - அதிபர்
ii. காப்பாளர் - அதிபரால் நியமிக்கப்பட்ட பிரதி அல்லது உதவி அதிபர்
iii. கழகப் பொறுப்பாளர் - ஆராய்ச்சி தொடர்பான அனுபவங்களுடன் கூடிய ஆர்வமுள்ள ஆசிரியர்களை கழகப் பொறுப்பாசிரியர்களாக நியமித்துக் கொள்ள முடிவதுடன், அவர்களிலிருந்து ஒருவரை கழகத்தின் பொறுப்பாளராக நியமித்துக்கொள்ள முடியும்.
iv. தலைவர்
v. உப தலைவர்
vi. செயலாளர்
vii. உப செயலாளர்
viii. பொருளாளர்
ix. செயற்குழு உறுப்பினர்கள் - இதற்காக, ஒவ்வொரு தரத்திலிருந்தும் ஒருவரை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதோடு, குழுவில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்குரிய அதிகாரம் செயற்குழுச் சபைக்கே உள்ளது. அந் நியமனம் பின்னர் பொதுச் சபையில் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

## 8.0 பதவி வகிப்பவர்களின் பணிகள்

### 8.1 பிரதான காப்பாளர்

8.1.1 ஆராய்ச்சி மாணவர் கழகத்தின் செயற்பாடுகள் தொடர்பாக வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வை செய்தல் மற்றும் கழகம் நடத்தும் ஆராய்ச்சிக்கு ஆரம்ப அனுமதியை வழங்குதல் மற்றும் பாடசாலையின் உள்ளார்ந்த ஒழுக்கம் மற்றும் நெறிமுறைகளுக்கு இணங்க அத் திட்டங்களைச் செயற்படுத்துவது பாடசாலையின் பிரதான காப்பாளர் என்ற ரீதியில் அதிபரின் பொறுப்பாகும்.

8.1.2 அத்துடன் கழகத்தின் செற்பாடுகளை பாடசாலையின் வருடாந்த மற்றும் இடைக்காலத் திட்டங்களில் உள்ளடக்குதல், இது தொடர்பில் ஆசிரியர்களை அறிவுறுத்தல், ஆசிரியர்களையும் மாணவர்களையும் மதிப்பீடு செய்தல் பாடசாலை அதிபரின் பணியாகும்.

### 8.2 காப்பாளர்

8.2.1 மாணவர் கழகத்தைச் சரியாக வழிநடத்துவது காப்பாளரின் பொறுப்பாகும்.

### 8.3 கழகப் பொறுப்பாசிரியர்

8.3.1 மாணவர்களைச் சுறுசுறுப்பாக கழகத்தின் செயல்பாடுகளில் ஈடுபடுத்துதல் மற்றும் வழிகாட்டுதல், ஆராய்ச்சி மாணவர் கழகத்தின் பொறுப்பாசிரியின் பொறுப்பாகும்.

8.3.2 மாணவர் கழகத்தின் உறுப்பினர்களிடமிருந்து புதிய முன்மொழிவுகளைப் பெறுவதிலும், அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களைச் செயற்படுத்துவது தொடர்பாக வினைத்திறனுடன் செயற்படுவது, கழகப் பொறுப்பாசிரியரின் பணியாகும்.

**8.4 தலைவர்**

8.4.1 ஆராய்ச்சி மாணவர் கழகத்திற்குத் தலைமைத்துவத்தை வழங்குதல்

8.4.2 ஆராய்ச்சி மாணவர் கழகத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் ஒழுங்கமைத்தல் மற்றும் பொறுப்பேற்றல்

8.4.3 ஆராய்ச்சி மாணவர் கழக கூட்டங்களை நடாத்துவதற்குக் கூட்டு முடிவுகளை எடுத்தல்,

8.4.4 ஆராய்ச்சி மாணவர் கழகத்தின் கூட்டங்களுக்குத் தலைமை வகித்தல்

8.4.5 ஆராய்ச்சி மாணவர் கழகத்தை நடத்துவது தொடர்பான பணிகளை மேற்கொள்ளுதல் (முக்கிய பதவிகளுக்கு பிரதிநிதிகளை நியமித்தல், வேட்புமனுக்களுக்கு அழைப்பு விடுத்தல், வேட்பு மனுக்களை நிறைவேற்றுதல், பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல் போன்றவை) மற்றும்,

8.4.6 ஆராய்ச்சி மாணவர் கழகத்தின் வளர்ச்சியைப் போல, அதன் வெற்றிக்கான நீண்ட கால இலக்குகள் மற்றும் உத்திகளை கூட்டாக வகுத்துச் செயற்படுத்துவதற்கான தலைமைத்துவத்தை வழங்குவது தலைவரின் பொறுப்பாகும்.

**8.5 உப தலைவர்**

8.5.1 ஆராய்ச்சி மாணவர் கழகத்தின் செயற்பாடுகள் மற்றும் வழிநடத்தல் தொடர்பாக தலைவருக்கு ஆதரவு அளித்தல், தலைவர் இல்லாத சந்தர்ப்பங்களில், தலைவர் பதவியின் கடமைகளைத் தழுவுவது உபதலைவரின் பொறுப்பாகும்.

**8.6 செயலாளர்**

8.6.1 கூட்ட அழைப்பு அறிக்கைக் குறிப்புகளைப் பேணுதல், மற்றும் மாணவர் கழகத்திற்குரிய கடித ஆவணங்கள், புத்தகங்கள் இற்றைப்படுத்தப்பட்டு பராமரித்தல்

8.6.2 கழகத்தில் முன்வைக்கப்படும் முன்மொழிவுகளைத் தாக்கல் செய்தல் மற்றும்

8.6.3 புதிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் மற்றும் தரவு அமைப்பினை பராமரிப்பது செயலாளரின் பணியாகும்.

**8.7 உப செயலாளர்**

8.7.1 செயலாளரின் செயற்பாடுகளுக்கு ஆதரவு அளித்தல் மற்றும் செயலாளர் இல்லாத சந்தர்ப்பங்களில், செயலாளர் பதவியின் கடமைத்தழுவல்களை ஏற்பது உப செயலாளரின் பொறுப்பாகும்

**8.8 பொருளாளர்**

8.8.1 ஆராய்ச்சி மாணவர் கழகத்தின் அனைத்து நிதி விவகாரங்களையும் மேற்கொள்ளுதல். (இங்கு ஆராய்ச்சிக் கழகப் பொறுப்பாசிரியரின் முழுப் பொறுப்பு மற்றும் வழிகாட்டலை கட்டாயமாகப் பெற வேண்டும்)

8.8.2 நிதி பரிவர்த்தனைகள் தொடர்பான பதிவுகளை புதுப்பித்த நிலையில் வைத்திருப்பது பொருளாளரின் பொறுப்பாகும்.

**பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களுக்கு செயற்குழுவின் விருப்பப்படி துணைக் குழுக்களை நியமிக்க முடியும்.**

**9.0 கூட்டங்களை நடத்துதல்**

பாடசாலை ஆராய்ச்சி மாணவர் கழகக் கூட்டங்கள், குழுக் கூட்டங்கள் மற்றும் பொதுக் கூட்டங்கள் என இரண்டு பகுதிகளாகும். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை குழுக் கூட்டமும், ஆண்டுக்கு ஒருமுறை பொதுக் கூட்டமும் நடத்தப்பட வேண்டும். அதேபோல், தேவைக்கேற்ப வெவ்வேறு குழுக் கூட்டங்கள் அல்லது விசேட பொதுச்சபைக் கூட்டங்களை, பாடசாலை அதிபரின் ஒப்புதலின் கீழ் மேற்கொள்ளலாம்

**9.1 வருடாந்தப் பொதுக்கூட்டம்**

வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் ஒவ்வொரு வருடமும் முதலாம் தவணையில் நடத்தப்பட வேண்டியதுடன், அதில் எதிர்வரும் ஆண்டிற்கான குழுவை நியமித்து, முந்தைய ஆண்டின் வரவு செலவு அறிக்கையைப் பொதுச் சபையில் அனுமதித்துக் கொள்ளுதல் வேண்டும். அதேபோல், பொதுக்குழுவின் முன்மொழிவுகளை கருத்தில் கொண்டு, எதிர்வரும் ஆண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள அனைத்து செயற்பாடுகள்/ திட்டங்கள் அடங்கிய வருடாந்த செயல் திட்டத்தை பேரவையில் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும். பிரதான காப்பாளர்/ காப்பாளர் (இருவரும்/ஒருவர்) இவ் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

**10.0 ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்**

கல்வி அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிளையின் கல்விப் பணிப்பாளர், மாகாண மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களின் ஆராய்ச்சிப் பாடங்களுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்கள்/அதிகாரிகளால் இவ் ஆராய்ச்சிக் கழகத்திற்குரிய ஆலோசனைகள் வழங்கப்படுவதோடு, (ஆராய்ச்சிக் கழகம் தொடர்பான நெருங்கிய தரப்பினர் என்ற வகையில்) பாடசாலையின் அதிபர் மற்றும் ஆராய்ச்சிக் கழகப் பொறுப்பாசிரியரினால், ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலை வழங்கப்படும். ஆராய்ச்சியை முடித்த மாணவர்கள் பள்ளி மட்டத்தில் மதிப்பீடு செய்யப்படலாம்.

**11.0 முன்மொழியப்பட்ட செயற்பாடுகள் மற்றும் அவற்றை செயற்படுத்துதல்**

ஆராய்ச்சி மாணவர் கழக உறுப்பினர்களின் முன்மொழிவுகளின் அடிப்படையில், அதிபரின் முதற்கட்ட ஒப்புதலுக்கு உட்பட்டு, ஆராய்ச்சி தொடர்பான பல்வேறு திட்டங்களைத் திட்டமிட முடியும். மாணவர் கழகத்தின் நோக்கங்களுக்கு ஏற்ப திட்டமிடக்கூடிய சில செயற்றிட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**11.1** சமூகத்தில் ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தைப் பற்றி மாணவர்களுக்குத் தெரியப்படுத்துதல், மாணவர்களுக்கு ஆராய்ச்சி நடத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான அடிப்படைக் கருத்துகள் மற்றும் முன்முயற்சி ஆற்றலை வளர்ப்பதற்கான செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல். அந்த நோக்கத்திற்காக, ஆராய்ச்சிப் பாடத்தைப் பற்றி கலந்துரையாடுவதற்காக ஆராய்ச்சிப் பாடத்தில் வாண்மையுள்ள வளவாளர்களை இணைத்துக்கொண்டு செயலமர்வு மற்றும் விரிவுரைகளை நடத்துதல்.

**11.2** ஆசிரியர்களின் வழிகாட்டுதலின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகளுக்குரிய ஆய்வுகளை நடத்துதல்.

**11.3** ஆராய்ச்சி நடத்துவதற்கு தேவையான வசதிகளை வழங்குதல்.

**11.4** ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை வெளியிடுவதற்காக பாடசாலையில் விசேட ஆராய்ச்சி கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல் மற்றும் அந்த ஆராய்ச்சிகளை எழுத்துப்பூர்வமாக வெளியிடுவதற்கான வாய்ப்புகளை வழங்குதல்.

**11.5** ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய கல்வி இதழ் ஒன்றை பாடசாலை மட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் வெளியிடுதல்

**11.6** ஆராய்ச்சிகளுக்குரிய துறைகளை மேம்படுத்தல்

**11.7** தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் போன்றவற்றில் பங்கேற்றல்

**11.8** கல்வி அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கிளையினால் ஆண்டுதோறும் நடத்தப்படும் "பாடசாலை ஆராய்ச்சி வாரத்தை" நடைமுறைப்படுத்துதல்.

**12. 0** பாடசாலை மாணவர் கழகத்தின் நிதி நிர்வாகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்கின் ஊடாகவும் கல்வி அமைச்சினால் இது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் அதன் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த சுற்றறிக்கையின் சிங்கள மற்றும் தமிழ் பதிப்புகளுக்கு இடையில் வேறுபாடு இருப்பின், சிங்கள பதிப்பு சரியானதாக கருதப்பட வேண்டும்.

**13.0** பாடசாலை ஆராய்ச்சி மாணவர் கழகங்களை ஸ்தாபிப்பது தொடர்பாக வெளியிடப்பட்ட இந்த சுற்றறிக்கையை தெளிவாக விளங்கி, 6ம் தரம் முதல் மேல் வகுப்புகள் நடைபெறும் பாடசாலைகளில் ஆராய்ச்சி மாணவர் கழகங்களை முறைப்படி நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும், எதிர்கால உலகத்திற்கு பயனுள்ள செயன்முறை மற்றும் ஆய்வுத் திறனுடன் கூடிய மாணவர் தலைமுறையொன்றை உருவாக்குவதற்கு வழிகாட்டும் இணைபாடவிதான செயற்பாடாக கருதி பாடசாலை ஆராய்ச்சி மாணவர் கழகத்தை வினைத்திறன் மிக்கதாக நடத்திச் செல்லும்படி அறியத்தருகின்றேன்.

எம். என். ரணசிங்க
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள் -

**1.** கணக்காய்வாளர் நாயகம், தேசிய கணக்காளர் அலுவலகம்
**2.** சகல மாகாண பிரதானச் செயலாளர்கள்
**3.** சகல மேலதிக செயலாளர்கள், கல்வி அமைச்சு
**4.** பணிப்பாளர் நாயகம் (கணக்கு மற்றும் நிதி) கல்வி அமைச்சு
**5** பிரதான உள்ளக் கணக்காய்வாளர், கல்வி அமைச்சு
**6.** பிரதான நிதி அதிகாரி, கல்வி அமைச்சு
**7.** சகல கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அமைச்சு
**8.** பணிப்பாளர், தேசிய செயற்பாட்டு அறை கல்வி அமைச்சு
**9.** கோட்டங்களுக்கு பொறுப்பான பிரதி / உதவி கல்விப் பணிப்பாளர்கள்,